பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

02 03 2025 **SUNDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ரமலான் நோன்பு, சமூகத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உறுதிபட கூறியுள்ளார்.

3. தொகுதி மறுவரையறை செய்வது குறித்து எவ்வித அறிவிப்பும் வெளியிடப்படாத நிலையில், தமிழக அரசு அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளது அவசியமற்றது என்று பிஜேபி தெரிவித்துள்ளது.

4. ரமலான் மாதத்தை முன்னிட்டு ஹமாஸ் உடனான தற்காலிக போர் நிறுத்தத்தை நீட்டிக்க இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது.

5. துபாய் ஓபன் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – ஆஸ்திரேலியாவின் **Alexei Popyrin** இணை பட்டம் வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>**

ரமலான் நோன்பு, சமூகத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர், ரமலான் நோன்பை தொடங்கியுள்ள இஸ்லாமிய மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த புனித மாதம் நன்றியுணர்வு, பக்தி, கருணை மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை பிரதிபலிப்பதாக உள்ளது என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>**

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உறுதிபட தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், போதைப்பொருள் இல்லாத நாடாக இந்தியாவை உருவாக்குவதில் மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறியுள்ளார்.

நாடு முழுவதும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான 12 வழக்குகளில் 29 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதை திரு அமித் ஷா சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், தெலங்கானாவில் உள்ள ஹைதராபாத் இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுடன் இன்று கலந்துரையாடுகிறார்.

அவரது இந்த பயணத்தையொட்டி, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே, குடியரசு துணைத்தலைவரின் வருகையையொட்டி, அப்பகுதியில், ட்ரோன்கள், கிளைடர் மற்றும் சிறிய ரக விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக சைபராபாத் காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, திரு ஜெக்தீப் தங்கர், ஒருநாள் பயணமாக இன்று கேரளா செல்கிறார்.

திருவனந்தபுரத்தில் பரமேஸ்வரன் நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றுகிறார்.

<<<<<<>>>>>

ஒரே மாதிரியான இரண்டு வாக்காளர் அடையாள எண்ணை வைத்திருப்பவர்கள் போலி வாக்காளர்கள் என கருத முடியாது என்று தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுதொடர்பாக, ஊடகங்களில் வெளியான செய்திகளையடுத்து, இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

வாக்காளர் அடையாள அட்டை எண் ஒரே மாதிரியாக இருந்தபோதிலும், அதில் இடம்பெற்றுள்ள தொகுதி மற்றும் வாக்குச்சாவடி உள்ளிட்ட பிற விவரங்கள் வேறுபட்டவை என அந்த ஆணையம் கூறியுள்ளது.

எந்தவொரு வாக்காளரும் தங்களது மாநிலத்தை சேர்ந்த குறிப்பிடப்பட்ட தொகுதியில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில் மட்டுமே வாக்களிக்க முடியும் என்பதை தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்த அச்சத்தை களையும் வகையில் வாக்காளர்களுக்கு தனித்துவ அடையாள எண் ஒதுக்கீடு செய்வது உறுதி செய்யப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

அடுத்த இரண்டு ஆண்டுகளில் 25 ஆயிரம் மக்கள் மருந்தகங்களை திறக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தில்லியில் மக்களிடையே மலிவு விலை மருந்தகங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மாதிரி மக்கள் மருந்தக மையத்தை, அத்துறைக்கான செயலர் திரு அமித் அகர்வால் தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த மையங்கள் மூலம், மலிவு விலையில் தரமான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

ஆண்டுதோறும் மார்ச் 7-ஆம் தேதி மக்கள் மருந்தக தினமாக கொண்டாடப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதனையொட்டி, நாடு முழுவதும் மார்ச் ஒன்றாம் தேதிமுதல், ஏழாம் தேதிவரை ஒருவார காலத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சில்லரை விற்பனை மையங்களில் மருந்துகள் 50 முதல், 80 சதவீதம் வரை குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாக திரு அமித் அகர்வால் கூறினார்.

<<<<<<>>>>>

தொகுதி மறுவரையறை செய்வது குறித்து எவ்வித அறிவிப்பும் வெளியிடப்படாத நிலையில், அரசியல் காரணங்களுக்காக, தமிழக அரசு அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளது என்று பிஜேபி மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுகுறித்து மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளதாக தெரிவித்தார்.

மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு தோல்வியடைந்துள்ளதை மறைப்பதற்காக இதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் மும்மொழி கொள்கையை அமல்படுத்துவதில் மாநில அரசு தயக்கம் காட்டி வருவதாக திருமதி வானதி சீனிவாசன் குறை கூறினார்.

<<<<<<>>>>>

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு மத்திய – மாநில அரசுகள் இணைந்து தீர்வுகாண வேண்டும் என்று ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சி மடத்தில் மீனவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட அவர், இதுகுறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக கூறினார்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அந்நாட்டு சிறையில் உள்ள மீனவர்களையும், அவர்தம் படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தியா - இலங்கை இடையேயான மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வுகாண்பது குறித்த பேச்சுவார்த்தையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு ஆர் என் ரவி வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் வனப்பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதால், வனவிலங்குகளுக்காக தொட்டிகளில் தண்ணீர் நிரப்பும் பணியினை வனத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கோடை காலம் முழுவதும் தண்ணீர் நிரப்பும் பணி தொடர்ந்து நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - சரவணன் - 54 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>**

ஹரியானாவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

மொத்தம் 33 உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த தேர்தல் நடைபெறுகிறது.

காலை எட்டு மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு, மாலை ஆறு மணியுடன் நிறைவடைகிறது.

இதில் பதிவான வாக்குகள் மார்ச் 12-ஆம் தேதி எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்படும்

எட்டு நகராட்சி அமைப்புகளுக்கென மேயர் பதவிகளுக்கு 33 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

பானிபட் நகராட்சிக்கு இம்மாதம் 9-ஆம் தேதி, தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

ரமலான் மாதத்தை முன்னிட்டு, ஹமாஸ் உடனான தற்காலிக போர் நிறுத்தத்தை நீட்டிக்க இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்க தூதர் திரு **Witkoff** யோசனையை ஏற்று இந்த போர் நிறுத்த நீட்டிப்பை அமல்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் நிறைவுபெற உள்ள நிலையில், இந்த நீட்டிப்பு குறித்த அறிவிப்பை இஸ்ரேல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க தூதரின் யோசனையை ஹமாஸ் அமைப்பினர் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

நிரந்தரமான போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படும்பட்சத்தில், எஞ்சியுள்ள பிணைக்கைதிகளை விடுவிப்பது குறித்து விவாதிக்கப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

லட்சத்தீவில் இன்று ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா, அருணாச்சலப்பிரதேசம், கேரளா மற்றும் மாஹே ஆகிய மாநிலங்களின் ஓரிரு இடங்களில் சூறைக்காற்று வீசக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, கர்நாடகா கடற்கரையோரப் பகுதிகளில் தொடர்ந்து வெப்ப அலை வீசும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொங்கன் மற்றும் கோவாவில் ஒரு சில பகுதிகளில் வெப்பம் அதிகரித்து காணப்படும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

துபாய் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – ஆஸ்திரேலியாவின் **Alexei Popyrin** இணை பட்டம் வென்றது.

நேற்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில், இந்த இணை 3-6, 7-6, 10-8 என்ற செட் கணக்கில், பின்லாந்தின் **Harri Heliovaara**- பிரிட்டனின் **Henry Patten** இணையை வென்றது.

<<<<<<>>>>>

பெங்களூரு ஏ டி பி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - தைவானின் **Ray Ho** இணை பட்டம் வென்றது.

நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், இந்த இணை, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் **Blake Bayldon – Mathew Christopher Romios** இணையை வென்றது.

<<<<<<END>>>>>